KAYALPATTINAM MUNICIPALITY
FORM 3
Minutes of the Meeting held on 05.10.2012

| Date of the Council Meeting | Decision Number | Subject of the Agenda | Decision of the Council |
|---|---|---|---|

260

**<u>பொருள் எண்:-1</u>**

காயல்பட்டணம் நகராட்சியில் ஒருங்கினைந்த நகர்ப்புற மேம்பபாட்டு குழுமம் 2012-2013-ன் கீழ் கீழ்கண்டுள்ள பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் (ந.க.எண்:-37191/2012/E1 நாள்:-14.09.2012) நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.

**அலுவலக குறிப்பு:-**

மேற்கண்ட திட்டத்தில் சாலை பணிகளில் **IUDM** திட்ட நிதி ஒதுக்கீடு 40.00 இலட்சம் போக கூடுதலாக உள்ள தொகை 7.00 இலட்சமும் மழைநீர் வாறுகால் பணியில் **IUDM** திட்ட நிதி ஒதுக்கீடு ரூ.45.00 இலட்சம் போக மீதமுள்ள தொகை ரூ.5.00 இலட்சமும் பொது நிதியிலிருந்து ஈடு செய்ய நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று திட்ட கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதையும் **IUDM**

| **சாலைப்பணிகள்** | | | | |
|---|---|---|---|---|
| **வ.எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டு தொகை** | **நகராட்சி பங்கு** | **IUDM பங்கு** |
| 1 | நெய்னார் தெரு முகைதீன் பள்ளி பெயர் பலகையிலிருந்து முகைதீன் பள்ளி பிரதான நுழைவு வாயில் வரையுள்ள தார் சாலையை மேம்பாடு செய்தல் மற்றும் நெய்னார் தெரு பிரதான சாலையிலிருந்து கோமான் நடுத் தெரு வரையுள்ள சாலையை மேம்பாடு செய்தல். | 12.00 | 1.79 | 10.21 |
| 2 | 18-வது வார்டு குளம்சாகிபுதம்பி தோட்டம் தெற்கு பகுதியில் புதிதாக தார்சாலை அமைத்தல் | 5.40 | 0.80 | 4.60 |
| 3 | 13-வது வார்டு வாணியாக்குடி தெரு எதிர்புறத்தில் உள்ள அவன் செயல் காலனியில் புதிதாக தார் சாலை அமைத்தல் | 3.10 | 0.46 | 2.64 |
| 4 | மருத்துவர் தெரு தார் சாலையை மேம்பாடு செய்தல் | 4.00 | 0.60 | 3.40 |
| 5 | மங்களவாடியில் மயான சாலையை தடுப்பு சுவர் கட்டி மேம்பாடு செய்தல் | 6.50 | 0.97 | 5.53 |
| 6 | ஆசாத் தெரு தார்சாலையை மேம்பாடு செய்தல் | 8.00 | 1.19 | 6.81 |
| 7 | 14-வது வார்டு பாஸ் நகர் தெருவில் புதிதாக தார் சாலை அமைத்தல் | 8.00 | 1.19 | 6.81 |
| | **மொத்தம்** | **47.00** | **7.00** | **40.00** |
| **தெரு விளக்கு பணிகள்** | | | | |
| 1 | நகராட்சி பகுதியில் புதிதாக **LED** தெருவிளக்குகள்(பிலிப்ஸ்) பொருத்துதல் | 20.00 | 0.00 | 20.00 |

அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | 261 | **<u>பொருள் எண்:-2</u>**<br>காயல்பட்டணம் நகராட்சியில் திறந்த வெளியில் மலம் கழிப்பதை தடுக்கும் திட்டம் (Eradication of Open Defecation) 2012-13-ன் கீழ் புதிய கழிப்பிடம் கட்டுவதற்கு ரூ.7.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதம் ந.க.எண்:-61951/P1/2012 நாள்:-25.09.2012 மன்றத்தின் பார்வைக்கு. மேற்படி திட்டத்தின் மூலம் வடக்கு முத்தாரம்மன் கோவில் தெருவில் கழிப்பிடம் அமைக்க ரூ.7.20 இலட்சம் மதிப்பீட்டில் திட்ட கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது மேற்படி இடத்தில் ரூ.7.20 இலட்சம் மதிப்பீட்டில் கழிப்பிடம் அமைக்க நிர்வாக அனுமதிக்காக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>(1) நிர்வாக அனுமதி வழங்கலாம்.<br>(2) இத்திட்டத்தில் கழிப்பறையை ஏற்கனவே இடவசதியுள்ள வடக்கு முத்தாரம்மன் கோவில் தெருவில் கட்டுவதற்கும் அதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.7.20 இலட்சத்தில் நிதி ஒதுக்கீடு ரூ.7.00 லட்சம் போக கூடுதலாகும் நிதியான ரூ.0.20 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து ஈடு செய்திடவும் நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 262 | **பொருள் எண்:- 3**<br>காயல்பட்டணம் நகராட்சியில் வடகிழக்கு பருவமழையின் போது பொது மக்கள் வசிக்கும் இடங்களில் தேங்கும் மழைநீரை போர்க்கால அடிப்படையில் ஆயில் இஞ்ஜின் மற்றும் ஜே.சி.பி. இயந்திரத்தின் மூலம் மழைநீரை வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளவும், தேவையான இடங்களில் ரப்பீஸ் போட்டு பள்ளத்தினை நிரப்பவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>(1) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(2) இதற்கான செலவினத் தொகை நகராட்சி பொது நிதியிலிருந்து ஈடு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது<br>அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது |